ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொதுப்படுகடன் திணைக்களம் |
| திகதி | 2018.10.26 |

## இலங்கை பாராளுமன்றம், இலங்கை அரசாங்கத்தினால் தீவிர பொறுப்பு முகாமைத்துவத்தினை மேற்கொள்வதற்காக இலங்கைக்கு உள்ளேயோ அல்லது வெளியிலிருந்தோ கடன்கள் மூலமாக ரூ.310 பில்லியனைத் திரட்டுவதற்கான தீர்மானத்தினை நிறைவேற்றியிருக்கிறது

பாராளுமன்றம் 2018.10.26 அன்று 2018ஆம் ஆண்டின் தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் “இலங்கை அரசாங்கம், 2018ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தின் ஏற்பாடுகளில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நோக்கங்களுக்காக ரூ.310.0 பில்லியனை விஞ்சாத தொகையொன்றினை கடன் மூலமாக இலங்கைக்கு உள்ளேயோ அல்லது வெளியிலேயோ திரட்டுவதற்கான தீர்மானத்தினை மேற்கொண்டுள்ளது.”

இலங்கை அரசாங்கம் அதன் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட வெளிநின்ற படுகடன் பொறுப்புக்களை முழுமையாக அறிந்துள்ளது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அதிர்வுகளின் சாத்தியமான தாக்கங்கள் காணப்படுகின்றமைக்கு மத்தியிலும் படுகடன் உறுதிப்பாட்டையும் பேரண்ட பொருளாதார உறுதித்தன்மையையும் ஏற்படுத்தக்கூடிய விதத்தில் நாட்டின் பொதுப்படுகடன் தோற்றப்பாட்டையும் முன்மதியுடைய தன்மையினையும் முகாமைப்படுத்துவதற்காக சட்ட ரீதியான கட்டமைப்பொன்றினை நிறுவனமயப்படுத்துவது அவசியமானதென்ற நோக்குடன் பாராளுமன்றம் 2018 மாச்சில் தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தினை நிறைவேற்றியது. தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டம் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டம், உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 417), பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 420) மற்றும் 1957ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க வெளிநாட்டுக் கடன் சட்டம் என்பன உள்ளிட்ட தொடர்பான சட்டங்களின் நியதிகளில், பொதுப்படுகடனை முகாமைப்படுத்துவதற்காக இலங்கைக்குள்ளேயோ அல்லது இலங்கைக்கு

வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டம் சட்ட ரீதியான கட்டமைப்பினை வழங்குகிறது.

இலங்கை அரசாங்கத்தின் தீவிர பொறுப்பு முகாமைத்துவக் கட்டமைப்பு வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள நிதியாண்டிற்கு வெளியே மீள்நிதியிடுவதற்கு/ அல்லது முன்நிதி படுகடன் மீள்கொடுப்பனவுகள் தொடர்பில் முன்கூட்டியே செயற்படுவது தொடர்பில் கவனம் செலுத்துகிறது. இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பு முகாமைத்துவ உபாயம் என்னவெனில் எதிர்காலத்தில் படுகடன் மீள்கொடுப்பனவுகளை இலகுபடுத்துவதற்கு நடைமுறைப்படுத்தும் விடயங்களைத் திட்டமிடுவதும் அத்தகைய மீள்கொடுப்பனவுகள், தற்போது நிலவுகின்ற மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற வட்டி வீதங்களிலும் பொதுப்படுகடனின் எதிர்கால முதிர்ச்சிகளின் அடிப்படையிலும் அரசாங்கத்தின் காசுப்பாய்ச்சலுக்கு இசைவான விதத்தில் சாத்தியமானளவிற்கு குறைந்த செலவில் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துவதுமேயாகும்.

தீவிர பொறுப்பு முகாமைமத்துவக் கட்டமைப்பு ரூ.310 பில்லியனைக் கடனாக இலங்கைக்கு உள்ளேயோ அல்லது வெளியிலோ தீவிர பொறுப்பு முகாமைத்துவத்திற்காகத் திரட்டுவதற்காக பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துடன் சேர்த்து அமைச்சரவையினால் உரிய முறையில் ஒப்புதலளிக்கப்பட்டிருப்பது தற்பொழுது சந்தை நிலைமைகளைப் பொறுத்து பின்வருவனவற்றிற்கு மட்டுப்படுத்தாத விதத்தில் உபாயங்களைப் பின்பற்றுவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் மிகவும் தேவையான சட்டக் கட்டமைப்பினை வழங்குகிறது.

(அ) அடையாளம் காணப்பட்ட கடன்களை திரும்ப வாங்குதல் அல்லது உரிய காலத்திற்கு முன் மீள்கொடுப்பனவு செய்வதற்கு

(ஆ) உயர்ந்த வட்டியில் பெறப்பட்ட வெளிநிற்கும் கடன்களுக்குப் பதிலாக குறைந்த வட்டி வீதங்களில் புதிய கடன்களை வழங்குவதற்கு

(இ) மாற்றுதல் மற்றும்/ அல்லது பரிமாற்றுவதன் மூலம் அடையாளம் காணப்பட்ட கடன்களின் முதிர்ச்சியை அல்லது மீள்கொடுப்பனவுக் காலத்தினை நீடிப்பதற்கு

(ஈ) அடையாளம் காணப்பட்ட கடன்களை புதிய நியதிகளில் புதிய கடன்களுக்கு கூட்டிணைத்தல் அல்லது மாற்றுவதற்கு

(உ) நிலவுகின்ற சாதகமான சந்தை நிலைமைகளிலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அத்தகைய பெறுகைகளை சாதகமற்ற நியதிகளில் பெறப்பட்ட ஏற்கனவேயுள்ள கடன்களை உரிய காலத்திற்கு முன்னரே மீள்கொடுப்பனவு செய்யப் பயன்படுத்துவதற்குமாக வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட நிதியியல் ஆண்டிற்கான கடன்பாட்டு வரையறைக்கு அப்பால் புதிய கடன்களைத் திரட்டுவதற்கு

(ஊ) தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி அவ்வாறு திரட்டப்பட்ட பணத்தினை வெவ்வேறாகப் பிரிப்பதற்காக பிரத்தியேக வங்கிக் கணக்குகளை அதாவது ரூபா மற்றும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைப் பேணுவதற்கு

(எ) மிகையான நிதிகளைப் பொருத்தமான திரவச் சொத்துக்களில் மேலே குறிப்பிடப்பட்ட வங்கிக் கணக்குகளில் முதலீடு செய்வதற்கு

இலங்கை அரசாங்கமும் இலங்கை மத்திய வங்கியும் சீன பண்டா சந்தை, யப்பானிய சாமுராய் சந்தை மற்றும் திரவ சுகுக் சந்தை போன்ற சந்தையை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டு நிதியிடல் மூலங்களுக்கு பன்முகப்படுத்துவதற்காகத் தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட சட்டக் கட்டமைப்பிற்குள் உருவாக்கப்பட்ட தீவிர பொறுப்பு முகாமைத்துவ உபாயத்திற்குத் தேவையான நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளன. பொறுப்பு முகாமைத்துவ உபாயம் நடைமுறைக்கிடப்படுவது இனிவரும் ஆண்டுகளில் மீள்நிதியிடல் தேவைப்பாடுகளை முன்கூட்டிய செயற்பாட்டுடன் கட்டுப்படுத்துவதற்குப் படுகடன் முகாமைத்துவத்திற்கும் செலவுச் சிக்கனமான முறையில் உள்நாட்டு வெளிநாட்டுப் படுகடன்களின் முதிர்ச்சிக் காலத்தினை விரிவாக்குவதற்கும் அதிகாரிகளை இயலுமைப்படுத்தும் என இலங்கை அரசாங்கமும் இலங்கை மத்திய வங்கியும் நம்புகின்றன.